சுதந்திரத்திற்குப் பின்னரான எமது வரலாற்றிலே நடைபெற்ற மிக மோசமான சம்பவமான 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளின் நாற்பதாவது ஆண்டு நிறைவினை இவ் வாரமானது குறித்து நிற்கின்றது. இச் சம்பவத்தின் பொது நினைவேந்தல் நிகழ்வுகள் குறைவாகக் காணப்பட்டமை மற்றும் பொருத்தமற்ற எண்ணிக்கையில் அதிகளவான பாதுகாப்பு படையினர் மற்றும் காவல்துறையினர்(பொலீஸார்) குவிக்கப்படடிருந்தமை, இக்கூட்டங்களில் பங்குபற்றியவர்களை கலைப்பதற்காக குறைந்தபட்சம் ஒரு தருணமாவது பலம் பிரயோகிக்கப்பட்டமை வருத்தமும் விசனமும் அளிக்கின்றது.

1983 ஆம் ஆண்டு ஜூலை சம்பவமே மூன்று தசாப்தங்களாக நீடித்த முழுமையான ஆயுதம் ஏந்திய சிவில் யுத்தத்திற்கு வழிவகுத்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்ப்பட்டார்கள், இடம்பெயர்ந்தனர் மற்றும் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்வதற்கு தள்ளப்பட்டார்கள். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த சிங்களவர்களின் தைரியத்திற்கு நாம் தலைவணங்குகிறோம். வெளிநாட்டு முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையில் நாடு மில்லியன் கணக்கில் நஷ்டம் அடைந்துள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவரீதியாக வெற்றியை பெற்றுக்கொண்ட அதேவேளை. ஆரம்ப படுகொலைகளின் பின்னரான நாற்பது ஆண்டுகள் மற்றும் இராணுவரீதியாக வெற்றியை பெற்று பதின்மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் இவ் முரண்பாட்டிற்கு ஒரு அரசியல் தீர்வு இன்னமும் அமையவில்லை. முன்மொழியப்பட்டடுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்ககுழுவானது பாதிக்கப்பட்டவர்களின் நேரடியான தெளிவான நிராகரிப்பு மற்றும் அவநம்பிக்கையினையும் எதிர்கொண்டுள்ளது; காணமல்போனவர்களின் வேதனை தொடர்கிறது; பயங்கரவாத தடைச்சட்டமானது இன்னமும் நீக்கப்படாமலும் மாற்றப்படாடலும் உள்ளது; உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கொண்டுவரப்படுவது பிற்போடப்பட்டுள்ளது; இன்னமும் பதின்மூன்றாவது திருத்தம் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் முழுமையாக அமுல்ப்படுத்தப்படவில்லை; திருத்தத்தில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரங்கள் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது. போர்க்குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. மேலும் பாதுகாப்பு படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தொல்பொருள் பாரம்பரிய காணிகள் மற்றும் சிவில் பொருளாதாரத்தில் பாதுகாப்பு படையினரின் ஈடுபாடு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

ஜூலை 1983 நிகழ்வுகளாலும் அதன் விளைவுகளாலும் இலங்கை குடிமக்கள் குறிப்பாக தமிழ்குடிமக்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் ஆழ்ந்த வடுக்களை கொண்டுள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்த ஆட்சியின் தீவிரமான மற்றும் பாரதூரமான சவாலை எதிர்கொள்வதற்கும் எமது ஆட்சி மற்றும் அரசாங்கத்தின் சட்டபூர்வத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலில் உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கும்

ஆற்றுப்படுத்தப்படல், நல்லிணக்கம் ஏற்படுத்தப்படல், ஒன்றுபடுதல் போன்ற தேவைகள் இலங்கைக்கு இருக்கின்றது. தண்டனையின்மை என்கின்ற சாபம் எமது பொதுவிவகாரங்களிலிருந்து முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

இனி எப்போதும் இது போன்று எதுவும் நடக்க எம்மால் அனுமதிக்க முடியாது. பன்முகத்தன்மையில்/வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கை அடிப்படையில் எமது எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பினை கையிலெடுக்க வேண்டும். இதனை செய்வதற்கு நாம் மறக்கக்கூடாது. எமது இதயங்களிலுள்ள பெருந்தன்மை காரணமாக நாம் மன்னிக்கத் தொடங்கினாலும் அரசு தனது குற்றங்களையும் தண்டனைக்குரிய தவறான நடத்தைகளையும் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து
நிறைவேற்றுப் பணிப்பாளர்